**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-05032021-3638

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.10.2020

Accepted: 10.11.2020

Published: 01.01.2021

Citation:
Ramesh Kumar, M. "Jargon In Tamil - A Semantic Study." *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 3, 2021, pp. 24–28.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3638

*Corresponding Author:
rameshkumarida@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Jargon in Tamil - A Semantic Study

**Dr. M. Ramesh Kumar**
*Assistant Professor, Department of Linguistics*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0003-1912-9843

**Abstract -** Semantics is the study of meaning. It is describe relationship, the use of words and functions in language. Everyone knows primary meaning it is called the dictionary meaning of the word and also designative meaning. If a word has only one meaning, it can easily be said that it does not exist in terms of usage (Polysemy, Synonymy, Homonymy). Not only these, the secret language, codes of words used by a group of people for conceptual use, Jargon (group code), however this section is the semantic area particularly connotative meaning; that needs to be explored and explained in the linguistic context. What kind of words, in what sense are they used, who, for what, where are they used. The purpose of this article is to explore and explain.

**Key Words:** Tamil Grammar Linguistics, Semantics, designative meaning, connotative meaning, polysemy, synonymy, homonymy, jargon.

**References**

1. Elambooranaar Urai. (2005). *Tholkkapiyam solathigaram*, Chennai, Saratha Pathipagam.
2. Soma Elavarasu. (1987). *Nanool Solathigara Urai*, Chidambaram, Sudar Pathipagam.
3. Sundarasanmuganar, (1965). *Tamil Agarathikalai*, Pondicherry, Painthamil pathipaga veliyeedu.
4. Sanmugam, S. (1989). *Porunmaiyiyal*, Annamalai Nagar, Anaithinthiya Mozhiyiyal Kalagam.
5. Mathaiyan, P. (1997). *Agarathiyiyal*, Tamil University.
6. Rajendran, S. (2015). *Porunmaiyiyal*, Thanjavur, Tamil University.
7. Karunakaran, K. (1975). Samuthaya Mozhiyiyal.
8. Srinivasa Varma, (1987) *Kilaimozhiyiyal*, Annamalai University, Annamalai Nagar, Chidambaram.

# தமிழில் குழுக்குறி – பொருண்மையியல் ஆய்வு

*முனைவர் மா. ரமேஷ்குமார்*
உதவிப் பேராசிரியர், மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்:*** *மொழியில் காணப்படும் சொற்களுக்கு அச்சொற்களின் பயன்பாட்டில் உள்ள சொற்பொருள் உறவை விளக்கி ஆராயப்படுவது பொருண்மையியல் ஆகும். இதில் சொற்களுக்கு நேரடிப்பொருள் எனக் கருதப்படும் அகராதிப்பொருள் யாவரும் அறிந்ததே. ஒரு சொல்லிற்கு ஒரு பொருள் மட்டும்தான் உண்டா என்றால் பயன்பாட்டின் அடிப்படையில் (ஒரு சொல் பலபொருள், பலசொல் ஒரு பொருள், ஒப்புரு சொற்கள்) இல்லை என்று எளிதில் கூறிவிடலாம். இவை மட்டுமின்றி ஒரு குழுவினர் மட்டும் கருத்துப்பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் ரகசிய மொழி, குறியீடு மற்றும் சிலசொற்களின் தொகுப்பு, குழுக்குறி, எனினும் இப்பிரிவு மொழியியல் நிலையில் ஆராய்ந்து விளக்கப்பட வேண்டிய சொற்பொருண்மையியல் பகுதியாகும். எவ்வகையான சொற்கள், எந்த பொருளில் பயன்படுத்தப்படுகிறன, யார், எதற்காக, எங்கு பயன்படுத்துகின்றனர். என ஆராய்ந்து விளக்குவதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் இலக்கணம், மொழியியல், பொருண்மையியல், ஒரு சொல் பலபொருள், பலசொல் ஒரு பொருள், ஒப்புரு சொற்கள், ரகசிய மொழி, குழுக்குறி, குழுவுக்குறி.*

## முன்னுரை

மொழியில் காணப்படும் சொற்களுக்கு அச்சொற்களின் பயன்பாட்டில் உள்ள சொற்பொருள் உறவை விளக்கி ஆராயப்படுவது பொருண்மையியல் ஆகும். இதில் சொற்களுக்கு நேரடிப்பொருள் (Designative meaning) எனக் கருதப்படும் அகராதிப்பொருள் யாவரும் அறிந்ததே. ஒரு சொல்லிற்கு ஒரு பொருள் மட்டும்தான் உண்டா என்றால் பயன்பாட்டின் அடிப்படையில் (ஒரு சொல் பலபொருள், பலசொல் ஒரு பொருள்) இல்லை என்று எளிதில் கூறிவிடலாம். இவைகள் மட்டுமின்றி ஒரு குழுவினர் மட்டும் கருத்துப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் ரகசிய மொழி, குறியீடு மற்றும் சில சொற்களின் தொகுப்பு, குழுக்குறி, எனினும் இப்பிரிவு மொழியியல் நிலையில் ஆராய்ந்து விளக்கப்பட வேண்டிய சொற் பொருண்மையியல் பகுதியாகும். எவ்வகையான சொற்கள், எந்தப் பொருளில் பயன்படுத்தப்படுகிறன, யார், எதற்காக, எங்கு பயன்படுத்து கின்றனர். என ஆராய்ந்து விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## குழுக்குறி

ஒரு குழுவினர் அல்லது குறிப்பிட்ட இனத்தவர் ஒரு பொருளை அதற்குரிய சொல்லால் கூறாது, அவர்களுக்கு மட்டும் புரியுமாறு குறியீடாக மாற்றிக் கூறுவது குழுவுக்குறி ஆகும். இது தொல்காப்பியத்திற்கு உரை எழுந்த காலத்தில் இருந்து காணப்படுகிறது.

**தகுதியும்வழக்கும்தழிஇயினவொழுகும்**
**பகுதிக் கிளவி வரைநிலை யிலவே**
**(தொல்.சொ-17)**

இந்நூற்பாவில் தகுதி என்பது மங்கலம் மரபினில் கூறுதலும், இடக்கடரடக்கிக் கூறுதலும், குழுவின் வந்த குறிநிலை என மூன்று வகைப்படும். அக்காலத்தில்

குழுவின் குறியாக '**வண்ணக்கர் காணத்தை நீலம் என்பர்**' என்ற தொடரின் மூலமாக சொற்பொருளை இளம்பூரணனாரின் உரைவழி அறியலாம்.

இப்பதிவு 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய நன்னூல் நூற்பாவின் உரைமூலமாகவும் அறிய முடிகின்றது. தொல்காப்பியத்தில் குறிப்பாக கூறப்பட்ட செய்திகள் இந்நூலின் உரைகள் மூலம் விரிவாக கூறப்பட்டுள்ளது.

**இலக்கணம் உடையது இலக்கணப்போலி**
**மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்**
**இடக்கர் அடக்கல் மங்கலம் குழுஉக்குறி**
**எனும்முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்**
**(நன் : 267)**

மேலும், வழக்கில் இருக்கும் ஒரு பொருள் தரும் சொல்லை விடுத்து, அதனை வேறொரு சொல்லால் குறிப்பிடுவது குழூஉக்குறி என்பர். இதனை ஒரு கூட்டத்தார் அல்லது குழுவினர் இத்தகைய சொல்லினைப் பயன்படுத்துவது வழக்கம். இவை பொது வழக்கன்று.

**எ.கா. பறி - பொான் (பொற்கொல்லர்)**
**சொல்விளம்பி - கள் (வேடர்கள்)**
**காரை - ஆடை (யானைப்பாகர்)**

மேலே கூறப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் யாவும் இலக்கண நூலின்கண் காணப்பட்டவையாகும். இதில் பறி, சொல்விளம்பி, காரை என்பவை குழுவுக்குறியாகும், இதன்பொருள் பொன், கள், ஆடை இதனைப் பயன்படுத்துபவர்கள் பொற்கொல்லர், வேடர், யானைப்பாகன் ஆவர். இனி மக்களிடம் இன்று பயன்பாட்டில் காணப்படும் குழுவுக்குறிச் சொற்களைக் காண்போம்.

### குழூக்குறியை பயன்படுத்துபவர்கள்

குழூக்குறி ஆரம்பகாலத்தில் அரசர், ஒற்றர், இராணுவவீரர், திருடர்களின் குறியீடாக இருந்தது. இவற்றுடன் இக்காலத்திலும் துறைவழக்குகள், வட்டார வழக்குகள், நண்பர்கள், தொழில்கள் என விரிவடைந்துகொண்டே செல்கின்றன.

### நண்பர்களின் குழூக்குறி

பள்ளி, கல்லூரி தொழில் நிகழும் இடங்களில், நண்பர்கள் உரையாடலில் பொதுச்சொற்களை விடுத்து. சில குறியீடு களில் தங்களுக்குள்ளேயே கருத்துக்களை பகிர்ந்து கொள்வதுண்டு. மற்றவர்கள் இதை அறிந்திருக்க வாய்ப்பில்லை, புரியவும் செய்யாது. ஆனால் அந்த நண்பர் வட்டத்திற்கு மட்டும் அவை அறிந்தவையாக இருக்கின்றன.

ஆசிரியர், மாணவர்கள் பாடங்களை கற்பிக்கும்/கற்கும்பொழுது அவர்களுக்கு மாற்றுப் பெயர்களாகப் பழம், அறுவை, இம்சை, சாரல், புலி என்று கூறுவார்கள். பெண்களை அடையாளப்படுத்தும் நேரங்களில் கலரு என்றும் அழகான பெண்களாக இருந்தால் கட்டை, மயில் என்றும், தனக்கு பிடித்தபெண்களை ஆளு, புச்சு என்றும், விபச்சாரம் செய்யும் பெண்களை ஐட்டம், டொயம் என்பர். மூன்றாம் பாலினத்தவர் அஜ்கு, கோச என்றும் அழைக்கப்பட்டு வருகின்றனர். இவற்றில் சில சொற்கள் மக்களின் பெருவழக்காக காணப்படுகின்றன. இருப்பினும் குறியீடாகப் பயன்படுத்தும் வழக்கமும் அதிகமாகக் காணப்படுகின்றது.

### திருடர்களின் குழூக்குறி

இராணுவத்திற்கு அடுத்தபடியாக அதிகளவில் குறியீடுகள் பயன்படுத்துபவர்கள் திருடர்களே சிறுசிறு நிகழ்வுகளையும் குறியீடுகளால் குறிப்பிடுகின்றனர். திருடுவதற்குச் செல்வதை தொழிலுக்குப் போய்வருவதாகவும், பள்ளிக்கூடம் செல்வதாகவும், பூசைக்குப் போய்வருவதாகவும், சம்பவம் செய்ய போவதாகவும் கூறுவதுண்டு. இவர்களிடம் வேலை செய்பவர்களைப் புள்ளிங்கோ என்று கூறுவதுண்டு. புள்ளிங்கோ

என்றால் அடியாட்கள் அல்லது தன்னுடன் பணியாற்றும் சக ஊழியர்கள், நண்பர்களைக் குறிக்கின்றது. மருந்து, பொட்டலம் என்றால் போதைப்பொருளையும், துப்பாக்கியைப் பூச்சி, கட்டை, பொருள், சாமான் என்ற பெயரால் அழைக்கின்றனர். மட்டப்பண்ணுதல், போடுதல் என்பது கொலைசெய்தலைக் குறிக்கின்றது. ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு சட்டவிரோதமாக சென்று அங்குள்ள பொருள்களைக் கொண்டு வருவபவர்கள் குருவி என அழைக்கப்படுகின்றனர். இவ்வாறாகப் பல்வேறு சொற்கள் இவர்களின் குழுவுக்குறி சொற்களாக உள்ளன.

### கோவில்களில் குழுவுக்குறி

கோவிலில் பூசை செய்பவர்கள் ஐயர், ஐயங்கார், பூசாரி என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களின்பேச்சுத்தமிழ்பொதுமொழியில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. இருப்பினும் இவர்களில் பயன்பாட்டில் சில சொற்கள் பொதுவழக்கில் இருக்கும் சொற்களைக் குறிப்பிட சில இடங்களில் பயன்படுத்துகின்றன. இவர்கள் குறிப்பிடும் பொருள்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதை உணரமுடிகின்றது. அவை:

**எ.கா.**

| | | |
|---|---|---|
| **எ.கா.** | **வாத்தியார் -** | **பூசை செய்பவர்** |
| | **பள்ளியறை -** | **கடவுள் தூங்கும் இடம்** |
| | **ஜடாரி -** | **கோவில்களில் தலைமீது வைத்து ஆசிர்வாதம் செய்ய பயன்படுத்தும் உலோகத்தாலான பொருள்** |
| | **மடப்பள்ளி -** | **கோவிலில் சோறு சமைக்கும் இடம்** |
| | **மருந்து வைத்தல் -** | **இயற்கை பொருள்களால் தயாரித்து கருவறையில் சிலை ஆடாமல் நிற்க வைப்பது** |
| | **கறி -** | **காய்கறி பொறியல்** |
| | **பத்து -** | **தொடக்கூடாது** |
| | **சாதிக்கனும் -** | **சோறு போடுதல்** |
| | **அக்காரவடிசல் -** | **பாயாசம்** |
| | **சாத்தமது -** | **புளியோதரை** |
| | **திருக்கண்ணமுது -** | **தயிர்சாதம்** |

இச்சொற்கள் அவர்களின் அன்றாட பேச்சு வழக்கில் காணப்பட்டாலும் இது ஒரு குழுவின் குறியாகும். குறிப்பிட்ட இடங்களில் மட்டும் பயன்படுத்தும் சொற்களாகவும் உள்ளன.

### துறை வழக்குக் குழுவுக்குறி

துறை வழக்கு என்பது தொழில் சார்ந்து அவர்களுக்குள் வழங்கும் சொற்குறியீடுகளாகும். வணிகம், மருத்துவம், வானியல், உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குறிப்பிட்ட தனித்துவமான சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அதனைத் துறைவழக்குச் சொற்கள் என்றும் குழுவுக்குறி என்றும் கூறலாம். மீனவர்கள், பழங்குடிமக்கள், பொற்கொல்லர்கள், நெசவாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் சொற்களும் சில குறியீடுகள் மூலமாகவே அவர்களுக்குள்தகவல்தொடர்புகொள்கின்றனர்.

சேலம், ஈரேடு, நாமக்கல், கோயபுத்தூர் ஆகிய பகுதிகளில் ஆடு, மாடு வளர்ப்பு, வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் குறிப்பிடத்தக்க தொழிலாக உள்ளது. மாட்டுச் சந்தை இப்பகுதியில் பிரபலமான ஒன்றாகும். இங்கு கூடும் மக்கள் (வியாபாரிகள்) மாடு வாங்கும்பொழுது பணத்தைக் குறிக்க குறியீடுகளை பயன்படுத்துகின்றனர். இது இவர்களுக்கான குறியீட்டு குறுமொழியாகும். அவர்கள் பயன்பாட்டில் சில சொற் குறியீடுகள்:

வாச்சி- நூறு
கால-இருநூறு
தொழுது-முந்நூறு
சதுப்பான்- நானூறு

புருக்-அறுநூறு
ஆலி-எழுநூறு
வழுவு- எட்டுநூறு
தாயம்- தொள்ளாயிரம்
பாறை-ஆயிரம்
துருவம்- பத்தாயிரம்

பணம் என்பதற்கு தனியே சொற்பொருள் இருக்க, அவற்றைவிடுத்துத் தனியே அவற்றிற்கு புதிய சொற்களை உருவாக்கி தங்களுக்கென ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். வாச்சி, கால, தொழுது, சதுப்பான், புருக், அலி, வழுவு, தாயம், பாறை, துருவம் உள்ளிட்டச் சொற்கள் அவர்களின் வணிகக் குறியீடாகும். இது இடைத்தரகர்களாக செயல்படுபவர்கள், வியாபாரிகள் மட்டும் அறிந்த சொற்கள். மற்ற நபர்கள் ஆடு, மாடு வாங்க நினைத்தால் இந்த இடைத்தரகர்களின் குழுக்குறியைஅவர்கள்அறியாதவையாகும். இதனால் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையில் நல்ல வருவாய் ஈட்டித்தருவதாகவும் இக்குறியீடுகள் அமைந்துள்ளன.

## வட்டார வழக்குகள்/ குழுவுக்குறி

அக்காலத்தில் தமிழ்மக்கள் பன்னிரு நிலத்திலும் பேசியமொழி சிறுசிறு வேறுபாடுகளுடன் காணப்பட்டன. இவை பேச்சு வழக்கு எழுத்து வழக்கு என இரு வேறுபாட்டுடனும் வழங்கி வந்துள்ளன. இதன் விளைவாக செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் என்று கால்டுவெல் அவர்களால் இலக்கண நூல்கள் படைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம் இடைப்பாடி வட்டத்தில் சில சொற்கள் மக்களின் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்கவைகளாக உள்ளன. வட்டார வழக்குச்சொற்களும்தனித்துவம்வாய்ந்ததாக உள்ளதைக் காணமுடிகின்றன. அவ்வட்டார வழக்குச் சொற்களை வயது முதிர்ந்தவர்கள் மட்டுமே அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர். மற்றவர்கள் இச்சொற்களை அறிந்திருக்கவில்லை. அவை

**கொறை- காலியிடம்**
**இட்டேரி- ஊரின் எல்லையில் அமைந்துள்ள காலி இடம்**
**மருக்க- குட்டி போடாத ஆடு**
**முருதார்- பன்றி**
**சுக்குட்டி- ஓணான்**
**மானா- மாட்டிறைச்சி**
**சீமண்ணெ- மண்ணெணை**

## முடிவுரை

குழுவுக்குறி என்பது குறியீட்டுமொழி, குறிப்பிட்ட குழுவினரின் மொழி, இது சொற்களுக்கு கூடுதல் பொருள் (Connotative Meaning) வழங்குகின்றது. அகராதிப் பதிவில் பொருள் அற்ற இந்தச் சொற்கள் இக்கட்டுரையின் வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குழுவுக்குறி மக்களின் அன்றாட பயன்பாடு முதல் எல்லாத்துறைகளின் அடையாளமாக விளங்குகின்றது.

## துணைநூற் பட்டியல்

1. இளம்பூரணனார் உரை. (2005). *தொல்காப்பியம் சொல்லதிகாரம்*, சென்னை, சாரதா பதிப்பகம்.
2. சோம இளவரசு, (1987). *நன்னூல் சொல்லதிகார உரை*, சிதம்பரம், சுடர் பதிப்பகம்.
3. சுந்தரசண்முகனார், (1965). *தமிழ் அகராதிக்கலை*, புதுவை, பைந்தமிழ் பதிப்பக வெளியீடு.
4. சண்முகம், செ. (1989). *பொருண்மையியல்*, அண்ணாமலைநகர், அனைத்திந்திய மொழியியல் கழகம்.
5. மாதையன், பெ. (1997). *அகராதியியல்*, தமிழ்ப் பல்கலைக்கழகம்.
6. ராசேந்திரன், ச. (2015). *பொருண்மையியல்*, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
7. கருணாகரன், கி. (1975). *சமுதாய மொழியியல்.*
8. சீனிவாச வர்மா. (1987). கிளைமொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம்.